**கவனிக்க.–** *2015.12.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1945 - 2015 දෙසැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2015.12.11

*1945 ஆம் இலக்கம் – 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1924 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1926 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2016, சனவரி மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யு. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016.01.11 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 23.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| பதுளை | பசறை | யட்டிகிந்த பிரிவின் விவாக (கண்டிய/பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

12-351

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் முஸ்லிம் விவாக பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 11 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 16.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| திருகோணமலை | தம்பலகாமம் | தம்பலகாமம் மேற்குப் பிரிவின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், திருகோணமலை |

12-320

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமாக மேலதிக விபரம் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2016, தை மாதம் 11 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2015, நவெம்பர் 20.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| திருகோணமலை | தம்பலகாமம் | முள்ளிப்பொத்தான பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர், அலுவலகம், திருகோணமலை |

12-288

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

***உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2016***

2014 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிந்து இலங்கை தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமாவிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**விண்ணப்பிக்கும் முறை**.- கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு முறையாக ஆங்கிலத்தில் பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள், கணக்கு இல. 025-2-001-1-3397613 இல் இலங்கையின் மக்கள் வங்கி, ஹைட் பார்க் கிளை (கொழும்பு) அல்லது வேறேதேனும் மக்கள் வங்கியில் 500 ரூபா (ஐநூறு) பற்று வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபாலில், பிரிவு "ஆ" இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/பிரிவிற்கு நேரடியாக அனுப்பப்படுதல் வேண்டும். "விண்ணப்பிக்கும் பாடநெறியை" கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள், ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் 500 ரூபா பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த வேறு கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதியான 2016.01.15 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/நிறுவகப் பிரிவுகள் என்பவற்றின் முகவரியும் அவற்றால் மேற்கொள்ளும் பாடநெறிகளும் பகுதி 'ஆ' இல் குறிப்பிடப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் பகுதி 'அ' இல் குறிப்பிட்டுள்ள பாடநெறிப் பட்டியலிலிருந்து தமது தகைமைக்கேற்றவாறு பாடநெறிகளைத் தெரிவுசெய்தல் வேண்டும்.

**விரிவுரைகளின் வகை :**

| | | |
|---|---|---|
| பகல்/முழுநேர பாடநெறிகள் | : | வேலைநாட்கள், பகல் நேரம் |
| பகுதி நேர பாடநெறிகள் | : | வார இறுதி நாட்கள், பகல் நேரம் |
| மொழிமூலம் | : | ஆங்கிலம் |

உரிய துறைகளில் கடமையாற்றுவோருக்கே பகுதி நேர பாடநெறிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

**பாடநெறிக் கட்டணங்கள்**.– பகல்/முழு நேர பாடநெறிகளுக்கு எவ்வித பாடநெறிக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. பகுதிநேர பாடநெறிகளுக்கான தவணைக் கட்டணங்கள் (Semester) பின்வருமாறு :

கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDA) 5,000 ரூபா.
ஆங்கிலம் உயர் தேசிய டிப்ளோமா (HND in English) 8,000 ரூபா.
தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT) 12,000 ரூபா.

**நேர்முகப் பரீட்சை**.– தகைமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் தேர்விற்காக எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும் அல்லது ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். மாணவர்களின் தேர்வுகள், க. பொ. த. (உ./த.) பரீட்சை மொத்தப் புள்ளிகள் மற்றும் “ Z ” புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டே நடைபெறும். எழுத்துமூல நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் இடம், நேரம், திகதி மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்கள் பற்றி அறிவிக்கப்படும். மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாதபோது பாடநெறி பதிவின்போது மூல ஆவணங்களை சமர்ப்பிக்கும் ஒப்பந்தத்தின்மீது சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தங்குமிட வசதிகள்**.– பெண்களுக்கான வரையறை செய்யப்பட்ட தங்குமிட வசதிகள் உயர் தொழில்நுட்ப நிறுவகங்களான கம்பஹா/தெஹிவளை பகுதிகளிலும் ஆண்/பெண் இருபாலாருக்குமான தங்குமிட வசதிகள் அம்பாறை ஹார்டி உ. தொ. நி./கொழும்பு ஆகிய பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வசதி முழுநேர பாடநெறி மாணவர்களுக்கு மாத்திரமேயாகும்.

### பகுதி ‘அ’

1. **பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) - சிவில் (முழு நேரம்) - 3 1/2 வருடங்கள்**
   **பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) - மின்சாரம் (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**
   **பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிஈ) - இயந்திரவியல் (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**
   **கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிபீஎஸ்ஈ) - (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**
   **பரிமாண நிலஅளவை உயர் தேசிய டிப்ளோமா (எச்என்டிகியூஎஸ்) - (முழுநேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் கணிதப் பிரிவில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் ;

அத்துடன்

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. **கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - “எச்என்டிஏ” (முழுநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் வணிகப் புள்ளிவிபரவியல், இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இப்பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணித பாடத்தில் திறமை சித்தி பெற்றிருப்பின் மேற்கூறிய பாடங்களில் ஏதேனுமொன்றின் திறமைச் சித்திக்கு மாற்றீடாக கருத்தில் கொள்ளப்படும் ;

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் ;

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

2.1 **கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - “எச்என்டிஏ” (பகுதிநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பழைய பாடத்திட்டமெனில் நான்கு பாடங்களிலும், புதிய பாடத்திட்டமெனில் மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் ;

அல்லது

(ii) உயர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் ;

அல்லது

(iii) உயர் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபார கல்விகள் (கணக்கியல் குழு) தேசிய சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அல்லது தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தேசிய சான்றிதழை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

அத்துடன்

*செயன்முறை அனுபவம்.–* விண்ணப்பதாரி அரசாங்க நிறுவனம்/ பொது நிறுவனங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இத்துறையில் சேவையாற்றுதல் வேண்டும்.

பின்வரும் தகைமை கொண்டுள்ளோர் முதலாம் ஆண்டில் விலக்களிக்கப்படுவர். அத்துடன் இட வசதிக்கும் தகைமைக்கும் இணங்க இரண்டாம் ஆண்டிற்கு அனுமதிக்கப்படுவார்கள் :-

(i) உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வியாபார கல்வி நிர்வாகம்/வியாபார நிதி/தேசிய டிப்ளோமாவைப் பூர்த்தி செய்திருத்தல்.
(ii) உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட வியாபார நிர்வாகம்/வியாபார நிதி/முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமாவைப் பூர்த்திசெய்திருத்தல்.
(iii) உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம் அல்லது தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிச் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட வர்த்தக உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ் இரண்டாம் ஆண்டைப் பூர்த்திசெய்திருத்தல்.
(iv) கீழ்க்குறிப்பிடப்பட்ட உரிய துறையில் பல்கலைக்கழக பட்டம் பெற்றிருத்தல் (கணக்கியல்/வியாபார நிருவாகம்/வர்த்தகமாணி (பிகொம்) சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/மனிதவள முகாமைத்துவம்/வியாபார நிதி/வியாபார பொருளியல்.
(v) “ஐசீஎஸ்எல்” பாகம் I மற்றும் II பூர்த்திசெய்திருத்தல் (ICA-SL).
(vi) “சீஐஎம்ஏ” பாகம் I மற்றும் II பூர்த்திசெய்திருத்தல் (CIMA-UK).
(vii) “ஏஏரீ” பூர்த்திசெய்திருத்தல் (AAT-SL).
(viii) “சீஎம்ஏ” பூர்த்திசெய்திருத்தல் (CMA-SL).

**3. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா – “எச்என்டிஎம்” (முழுநேரம்) – 3 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் எல்லா பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் (கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் விரும்பத்தக்கது) ;

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி (பொது நிருவாகம்/சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழ் அல்லது கணக்கீட்டு தொழில்நுட்பவியல் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல் ;

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**4. உல்லாச மற்றும் உபசரணை முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா – “எச்என்டிரீஎச்எம்” (முழுநேரம்) – 3 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் (கணிதம், விஞ்ஞானம், வர்த்தகம் விரும்பத்தக்கது).

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தால் நடாத்தப்படும் வியாபாரக் கல்வி (பொது நிருவாகம்/சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழ் அல்லது கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழ் பெற்றிருத்தல்.

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**5. வியாபார நிர்வாகம் உயர் தேசிய டிப்ளோமா – “எச்என்டிபீஏ” (முழுநேரம்) – 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சையில் வர்த்தகத் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் ;

அல்லது

(ii) உயர் தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண தர சித்தி பெற்றிருத்தல்.

***6. தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா- "எச்என்டிஐரி" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள் ; (பகுதி நேரம்) - 2 1/2 வருடங்கள்***

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (கணிதம, விஞ்ஞானம், வர்த்தகத்துறை விரும்பத்தக்கது) ;

அத்துடன்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**குறிப்பு**.- பகுதி நேர மாணவர்கள் மட்டும் தகவல் தொழில்நுட்பத் துறையில் சேவையாற்றுதல் வேண்டும்.

**7. தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) - (முழு நேரம்) - 3 வருடங்கள் :**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விஞ்ஞான துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும். அவற்றுள் பின்வருவனவற்றில் இரண்டு பாடங்கள் உள்ளடங்க வேண்டும். (இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதீகவியல்) ;

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

***8. ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா "எச்என்டி ஆங்கிலம்" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள் (பகுதி நேரம்) - 2 வருடங்கள்***

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்தி பெற்றிருப்பதுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்திலோ அல்லது ஆங்கில இலக்கியத்திலோ திறமைச் சித்தி பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) கல்வியியல் கல்லூரியினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் ;

அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஏதேனும் துறையில் ஒரே அமர்வில் சகல பாடங்களிலும் சித்திபெற்றிருப்பதுடன் தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் வர்த்தகம், கைத்தொழில், மற்றும் மேலும் கல்விக்கான ஆங்கில தேசிய சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள்.

**குறிப்பு**.- பகுதிநேர விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட தகைமைகளுடன் கூடிய ஏதேனும் துறையில் நிரந்தர சேவையாற்றுதல் வேண்டும்.

**9. வியாபார நிதி உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபிஎவ்" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மூன்று பாடங்களில் பொருளாதாரம், வியாபாரக் கல்வி மற்றும் கணக்கியல் உட்பட அல்லது கீழ்க்குறிப்பிடப்பட்ட ஏதேனும் இரு பாடங்களுடன் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல் (புவியியல், மனைப்பொருளியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்க சாஸ்திரமும் விஞ்ஞானம்சார் முறைகள், விவசாய விஞ்ஞானம் அல்லது இணைந்த கணிதம்)

அல்லது

(ii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

*10.* **உணவு தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா- "எச்என்டிஎவ்ரி" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் உயிரியல் அல்லது பௌதீக விஞ்ஞான துறையில் மூன்று பாடங்களில் சித்தி ;

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**பகுதி 'ஆ'**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/ உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் நடைபெறும் பாடநெறிகள் :

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரி | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 1 | ஹாடி உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், அம்பாறை | இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063-2222056, 063-2223035 | எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ(ப.நே), எச்என்டிஎம், எச்என் டிஜரி (மு.நே), எச் என்டிரி (விவசாயம்) ஆங்கிலத்தில் எச் என்டி (மு.நே) ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே), எச்என்டிரிஎச்எம் |
| 2 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, அநுராதபுரம் | ஏக்கர் III, அநுலா வீதி, பண்டுலகம, அநுராதபுரம் | 025-2234417 | எச்என்டிஏ(மு.நே), எச்என்டிஏ(ப.நே), எச்என்டிஎம், எச்என்டிஜரி(மு.நே.), எச்என்டிஜரி(ப.நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே.), ஆங்கிலத்தில் எச்என்டி(ப.நே.), எச்என்டிஜரி(மு.நே), எச்என்டிஜரி(ப.நே.) |
| 3 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218, 055-2223818 | எச்என்டிஏ(மு.நே), எச்என்டிஏ(ப.நே), எச்என்டிஎம், எச்என்டிஜரி(மு.நே.), எச்என்டிஜரி(ப.நே), ஆங்கிலத்தில் எச்என்டி(மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி(ப.நே.) எச்என்டிரீஎச்எம் |
| 4 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, மட்டக்களப்பு | பிரதான வீதி, கோவில் குளம் கிழக்கு, ஆரயம்பதி | 065-2247519 | எச்என்டிஏ(மு.நே), எச்என்டிஏ (ப.நே), ஆங்கிலத்தில் எச்என்டி(மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே), எச்என்டிஜரி(மு.நே), எச்என்டிஜரி(ப.நே.) |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரி | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 5 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கொழும்பு | இல. 42, ரொற்றிகோ இடம், கொழும்பு 15 | 011-2529479 011-2521282 | எச்என்டிஈ (சிவில், மின்சாரம், இயந்திரவியல்), எச்என்டிகியூஎஸ், எச்என்டிபீஎஸ்ஈ |
| 6 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், தெஹிவளை | இல. 51, வைத்தியா வீதி தெஹிவளை | 011-2738349 | எச்என்டிஏ(மு.நே), எச்என்டிஏ(ப.நே), எச்என்டிஎம், எச்என்டிபீஏ, எச்என்டிஐரி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே), எச்என்டிபீஎப், எச்என்டிரிஎச்எம் |
| 7 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், காலி | ஸ்ரீ தம்ம மாவத்தை, லபுதுவ, அக்மீமன | 091-2227880, 091-2246179 | எச்என்டிஈ (சிவில், மின்சாரம், இயந்திரம்), எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ (ப.நே), எச்என்டிஎம், எச்என்டிரிஎச்எம், எச்என்டிபீஏ, எச்என் டிஐரி(மு.நே), எச்என்டிஐரி (ப.நே.), எச்என்டிரி (விவசாயம்), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி(ப.நே), எச்என்டிகியூஎஸ் |
| 8 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கம்பஹா | நைவல, எஸ்ஸல, வெயாங்கொடை | 033-2287519, 033-2292544 | எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ(ப.நே), எச்என்டிஐரி(மு.நே), எச்என்டிரி (விவசாயம்), எச்என்டிஎவ்ரி, எச்என்டிஐரி (ப.நே) |
| 9 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், யாழ்ப்பாணம் | இல. 665/2, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595 021-2229803 | எச்என்டிஈ (சிவில், மின்சாரம்), எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ (ப.நே), எச்என்டிஎம், எச்என்டிஐரி (மு.நே.), எச்என்டிஐரி (ப.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), எச்என்டிரிஎச்எம் |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல மாவத்தை, கண்டி | 081-2226644, 081-2232097 | எச்என்டிஏ(மு.நே), எச்என்டிஏ (ப.நே), எச்என்டிஎம், எச்என் டிபீஏ, எச்என்டிஐரி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே), எச்என்டிரிஎச்எம் |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரி | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297<br>035-2221713 | எச்என்டிஏ(மு.நே), எச்என்டிஏ (ப.நே), எச்என்டிஐரி(மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி(ப.நே) |
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், குருநாகல் | இல. 22/1, வில்கொடை வீதி, குருநாகல் | 037-2224911,<br>037-2229583 | எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ (ப.நே), எச்என்டிஎம் (மு.நே), எச்என்டிஐரி (மு.நே), எச்என்டிஐரி (ப.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே), எச்என்டிரிஎச்எம் |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, இரத்தினபுரி | புதிய நகர், இரத்தினபுரி | 045-2231492<br>045-2231493 | எச்என்டிஏ(ப.நே), எச்என்டிஏ(மு.நே), எச்என்டிஐரி(மு.நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப. நே) |
| 14 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு சம்மாந்துறை | பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 | எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ(ப.நே), எச்என்டிஐரி(மு.நே.), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே.) |
| 15 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, தங்காலை | யாயவத்தை, நெட்டொல் பிட்டிய, தங்காலை | 047-2241842,<br>047-2241843<br>047-2241844 | எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ (ப.நே) எச்என்டிஐரி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி(ப.நே.) |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், திருகோணமலை | கிண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-2223232<br>026-2050617 | எச்என்டிஏ (மு.நே), எச்என்டிஏ (ப.நே), எச்என்டிஐரி(மு.நே), எச்என்டிஐரி(ப.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (ப.நே) |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரி | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 17 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு வவுனியா | ஏ9 பாதை, வேப்பங்குளம், ஓமந்தை, வவுனியா | 024-2052733 | எச்என்டிஏ (மு.நே), ஆங்கிலத்தில் எச்என்டி (மு.நே), எச்என்டிஐரி (மு. நே) |

**குறிப்பு** :

1. பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா, பரிமாண நிலஅளவை உயர் தேசிய டிப்ளோமா, கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (முழு நேரம்) மாணவர்கள் பாடநெறிக்கு வார நாட்களில் கலந்துகொள்வதுடன் தேவைக்கிணங்க குறித்த சில தினங்களில் வார இறுதி நாட்களிலும் கலந்துகொள்ளல் வேண்டும்.

2. கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா (பகல்/முழுநேரம்) பாடநெறிகள் முதலாம், இரண்டாம் வருடங்களில் வார நாட்களில் மாத்திரம் நடைபெறுவதுடன் மூன்றாம் நான்காம் வருடங்களில் வாரஇறுதியில் மாத்திரம் நடைபெறும்.

3. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (பகல்/ முழுநேரம்) பாடநெறிகள் முதலாம், இரண்டாம் வருடங்கள் வார நாட்களில் பகலிலும் மூன்றாம் வருடம் வார இறுதிநாட்களிலும் நடைபெறும்.

4. க.பொ. த. (உ. த.) புதிய பாடத்திட்டத்தில் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகள் பொது வினாப்பத்திரத்தில் கட்டாயம் சித்தியொன்று பெற்றிருத்தல் அவசியம்.

5. ஒவ்வொரு கல்வி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒவ்வொரு தேர்விற்கான தேர்வுப் பிரமாணமாக க. பொ. த. (உ. த.) வின் "Z" புள்ளிகள் கருத்திற்கொள்ளப்படும்.

6. பாடநெறிக்கான உரிய தகைமை கொண்டவர்க்கு முன்னுரிமை வழங்கப்படும்.

7. 23 வயதிற்குட்பட்டோருக்கு பகல் நேர பாடநெறிக்கான முன்னுரிமை வழங்கப்படும்.

8. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/ நிறுவக பிரிவொன்றினால் நடாத்தப்படும் பாடநெறியொன்றுக்கு குறைந்தபட்சம் 50 விண்ணப்பதாரிகளாவது இருத்தல் வேண்டும்.

9. விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எதிர்பார்த்ததைவிட கூடுதலாக இருப்பின் நிறுவக வாரியாக விவேகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

10. குறிப்பிட்ட உயர் தொழில்நுட்ப நிறுவகம் அல்லது உ. தொ. நி. பிரிவில் முழுநேர பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அம்மாணவர்கள் எவ்வித காரணம் கொண்டும் வேறேதேனும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்கு மாற்றப்படமாட்டார்கள்.

11. உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்தில் மூன்று அல்லது மூன்றிற்கு மேற்பட்ட பாடநெறியை பதிவுசெய்யும் மாணவருக்கு பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் பொருட்டு தமது பதிவினை விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து 60 நாட்களுள் தமது இரத்துச்செய்துகொள்ள இந்நிறுவகம் இடமளிக்கும்.

**குறிப்பு**.- 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான ஆட்சேர்ப்பு சம்பந்தமான இறுதி முடிவு உயர் தொழில்நுட்பவியல் நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் முடிவு என்பதனை கவனத்திற்கொள்க.

விண்ணப்ப முடிவுத் திகதி : 2016.01.15.
இணையத்தளம் : www.sliate.ac.lk.

டபிள்யூ. ஹிலரி ஈ. சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்.

*Office use only –* | *Course Number …………………*

***SPECIMEN APPLICATION FORM***

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION**

**Application form for Admission to Higher National Diploma Courses in year 2016**

**Name of the Courses in the order of preference**

1. ……………………………………………………
2. ……………………………………………………
3. ……………………………………………………

1. Name with Initials :————.
2. Name/Names denoted by Initials :————.
3. Address :————.
4. Date of Birth : Year :————, Month :————, Day :————.
   Age (as at 15.01.2015) : Years :————, Months :————, Days :————.
5. National Identity Card No. :————.
6. Sex : :————.
7. Administrative District :————. Contact Phone Number :————.
8. (i) Result of G.C.E (A/L) Examination (on or Before 2014) :

   Year:————. Index No. :————. Medium :————.

| *Subjects* | *Grade* |
|---|---|
| 1. ……………………. | ……………. |
| 2. ……………………. | ……………. |
| 3. ……………………. | ……………. |

Common General Paper : (Pass/Fail)

Aggregate/Z-Score of the above Examination :————.

(ii) Result of G.C.E (Ordinary Level) Examination :-

Year:————. Index No. :————. Medium :————.

| *Subjects* | *Grade* | *Subjects* | *Grade* |
|---|---|---|---|
| 1. ……………………. | ……………. | 6. ……………………. | ……………. |
| 2. ……………………. | ……………. | 7. ……………………. | ……………. |
| 3. ……………………. | ……………. | 8. ……………………. | ……………. |
| 4. ……………………. | ……………. | 9. ……………………. | ……………. |
| 5. ……………………. | ……………. | 10. ……………………. | ……………. |

9. Highest Qualification in English as a subject :————.
10. Only for Part Time Courses :
    Details of Present Employment :
    Date of Appointment :————.
    Post :————.
    E.P.F. Number :————.
    Place of work and Address :————.

I do hereby declare that I am not following any other full time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full time course at any other state institution. I do hereby certify that the information furnished here is true and accurate to the best of my knowledge.

————,
Signature of Applicant.

Date :————.

(The bank receipt for Rs.500. Payable to SLIATE should be annexed.)

**Affix the bank SLIP wich you paid to the Peoples Bank**

Name of the Bank : People's Bank
Branch : Hyde park corner branch, Colombo 02
Account No. : 025-2-001-1-3397613

12-393

---

**கல்வி அமைச்சு**

கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

கல்வி அமைச்சில் வெற்றிடமாகக் காணப்படும் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சைக்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யும் இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. கல்வித் தகைமை :**

(அ) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

(ஆ) கல்விப் பொதுத்தராதரப் (உயர் தரப்) பரீட்சையில் சகல பாடங்கள் (பொது சாதாரணப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் (பழைய பாட விதானத்தின்கீழ் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருப்பது போதுமானதாகும்).

**2. உரிய துறையில் தொழில் தகைமைகள் :**

(i) மொறட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா ; அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞானத் தேசிய டிப்ளோமா ; அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா ; அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ; அல்லது

(v) இலங்கைப் பொறியியல் நிறுவகத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் முதலாம் பகுதியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்திருத்தல் ;

(vi) தொழில் துறைக்குரிய தேசிய மற்றும் தொழில்சார் திறமை, (NVQ) மட்டம் 6 இன் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் ;

(vii) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்கூறப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழை வழங்கும் நிறுவனங்களிடம் வினவி யோசனைகளைப் பெற்றுக்கொண்டதனைத் தொடர்ந்து மேற்கூறப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு சகல முறைகளிலும் சமமான மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுச் சபையினால் வழங்கப்படும் ஏனைய தொழில்நுட்பத் தகைமையினைப் பெற்றிருத்தல்.

3. **வயதெல்லை.**- விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று 18 வயதைவிடக் குறையாது இருக்க வேண்டிய துடன் 30 வயதைவிட மேற்படாது இருக்க வேண்டும்.

(இதற்கமைய வயது தொடர்பில் தகைமைகள் பூர்த்திசெய்யப்படுவது விண்ணப்பதாரியின் பிறந்த தினமாக 1998.01.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1986.01.11 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னராக இருப்பின் மாத்திரமாகும்.)

**4. ஏனைய தகைமைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ii) சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருக்க வேண்டும் ;

(iii) சகல பரீட்சார்த்திகளும் இலங்கையின் எந்தவொரு பிரதே சத்திலும் சேவையாற்ற மற்றும் பதவியில் கடமையினை மேற்கொள்ள போதியளவு உடல், உளத் தகைமை கொண்டவராக இருக்க வேண்டும் ;

(iv) பதவிக்கு நியமிப்பதற்காகத் தேவையான தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதாக அங்கீகரிக்கப்படுவது, விண்ணப்ப தாரி 1 மற்றும் 2 ஆம் வாசகத்தின்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேவையான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்தன்று சகல முறை களிலும் பூர்த்தி செய்திருப்பின் மாத்திரமாகும்.

5. **சம்பள அளவு.**- பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (iv) இற்கமைய எம்என் 3-2006ஏ சம்பள அளவு (15,005 ரூபா - 4 x 180 - 6 x 240 - 11 x 320 - 20 x 360 - 27,885 ரூபா) உரித்தாகும்.

6. **ஆட்சேர்ப்புப் பரீட்சை.**- எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுக்கமைய சேர்த்துக்கொள்ளப்படும். எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகள் திறமைத் தொடருக்கமைய சேர்த்துக்கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி தகைமை கொண்டோர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**எழுத்துமூலப் பரீட்சை :**

| பாட இலக்கம் | பாடங்கள் | நேரம் (மணித் தியாலம் | உயர்ந்த பட்ச புள்ளி களின் அளவு | சித்தி யடை யும் புள்ளி களின் அளவு |
|---|---|---|---|---|
| 1 | நுண்ணறிவுப் பரீட்சை | 01 | 100 | 40% |
| 2 | பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் பாட இணைப் பரீட்சைகள்) | 02 | 100 | 40% |

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடவிதானம் |
|---|---|
| 1. நுண்ணறிவுப் பரீட்சை (நேரம் : 1 மணித்தியாலம்) | பரீட்சார்த்தியின சிந்தனை தர்க்க ரீதி யான, பகுப்பாய்வு இயலுமைகள், நேர முகாமைத்துவம், தீர்வுகளைக் காணக்கூடிய பல்வகை மற்றும் சுருக்கமாக விடையளிக்கக்கூடிய வினாத்தாள்களைக் கொண்டமைந் துள்ளதுடன் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். |
| 2. பொதுப் பரீட்சை (தொழில்நுட்ப மற்றும் பாட இணைப் பரீட்சை) (நேரம் : 2 மணித்தியாலம்) | வாகனங்களைப் பழுது பார்த்தல், வாகனப் பராமரிப்பு, வாகனங்களின் களின் குறைபாடுகளைத் தீர்மானித் தல், போக்குவரத்திற்குப் பொருத்த மற்ற வாகனங்களைத் தீர்மானித்தல், வாகன உதிரிப்பாகங்களைப் பொருத் துவது தொடர்பிலான மதிப்பீட்டி னைத் தயாரித்தல், வாகனங்களின் எரிபொருள் வெளிப்படும் சேவை, வாகனக் காப்புறுதி, வாகனத்தைச் செலுத்தும்போது ஏற்படக்கூடிய விபத்து மற்றும் நட்டஈடுகள் போன்ற பதவிக்குரிய தொழில் நுட்ப அறிவினை அளவீடு செய்யும் கேள்விகளைக் கொண்டமைந்துள் ளது. சகல வினாக்களுக்கும் விடை யளிக்க வேண்டும். |
| பரீட்சை முறை மற்றும் பரீட்சை மொழி | இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் கொழும்பு நகரில் மாத்திரம் நடைபெறும். (விண் ணப்பதாரர்களின் எண்ணிக்கைக் கமைய மத்திய நிலையம் தீர்மானிக் கப்படும்.) |
| பொது நேர்முகப் பரீட்சை | விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக் கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரி யானது எனப் பரிசீலனை செய்வதற் காக நடாத்தப்படும் பொது நேர்முகப் பரீட்சையாகும். புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. |

**7. சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியச் சம்பளம் கொண்டது. விதவைகள், தபுதாரர் ஓய்வூதியச் சம்பள நிதிக்கு பங்கு நிதி செலுத்த வேண்டும் ;

(ii) தாபன விதிக்கோவையில் II ஆம் வாசகத்தில் 10-12 வரை யான பிரிவுகளில் ஒழுங்கு விதிமுறைகள் உரியதாகும் ;

(iii) மூன்று ஆண்டுகால தகுதிகாண் காலத்திற்குள் உட்படு வதுடன் திணைக்களத்தின் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் ;

(iv) 2007.05.28 ஆந் திகதிய 2007/ 7 பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கமைய மொழித் தேவையினைப் பூர்த்திசெய்ய வேண்டும்.

8. **பரீட்சார்த்தியின் அடையாளங்கள்.**- பொதுவாக நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவது சகல முறைகளிலும் விண் ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து சமர்ப்பித்துள்ள விண்ணப்ப தாரிகள் மாத்திரமாகும்.

நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதி மற்றும் உரியவாறு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக கப்பட வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் தமது ஆளடையாளத்தை உறுதிப் படுத்துவதற்காகக் கீழ்க்குறிப்பிடப்பட்ட அடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடி யாகும் தேசிய ஆள் அடையாள அட்டை ;
(2) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

9. (i) விண்ணப்பப்படிவத்தை 2016.01.11 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும் :

பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. இல. 1503,
கொழும்பு.

(ii) சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பப்படிவத்தின் மாதிரிப் படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களது விண்ணப்பப்படிவத்தை ஏ4 அளவு தாளில் முதல் பக்கத்தில் இலக்கம் 1-7 வரையும், இரண்டாம் பக்கத்தில் 8-13 வரையும் மூன்றாம் பக்கத்தில் 14-15 வரையுமாகத் தயாரித்து தமது கையெழுத்தின் மூலம் பூர்த்திசெய்ய வேண்டும். விண்ணப்பப்படிவத்தைத் தயாரிக்கும்போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிட வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தி யோகத்தர் பதவிக்குச் சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015" எனக் குறிப்பிட வேண்டும்.

(iv) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப்பத்தி ரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஏதேனும் நிறுவனத்தினால் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை நிறுவனப் பொறுப்பாளர் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்படும் உத்தியோகத்தர் ஊடாகவும் அவ்வாறல்லாத விண்ணப்பதாரி தமது கையொப்பத்தை

அரச பாடசாலைப் பொறுப்பாளர், கோட்டத்தின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் அதிகாரி பதவி கொண்ட உத்தியோகத்தர்கள், 2,40,360 ரூபா அல்லது அதனைவிட மேற்பட்ட வருடாந்த திரண்ட சம்பளத்தைப் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் அல்லது நிரந்தர பதவி நிலைத் தரத்திலுள்ள உத்தியோகத்தர் ஊடாக உறுதிப்படுத்த வேண்டும்.

(v) தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர் தமது விண்ணப்பப்படிவத்தினைத் தாம் சேவையாற்றும் திணைக்களத்தின் பொறுப்பாளர் ஊடாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) உரிய மாதிரிப்படிவத்திற்குப் பொருத்தமல்லாத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தாதுள்ள மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யாத, பூரணப்படுத்தாத நிலையிலுள்ள விண்ணப் பப்படிவங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். உரியவாறு விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்திசெய்யாமையினால் ஏற்படக்கூடிய நட்டத்தை விண்ணப்பதாரியே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப் பப்படிவத்தின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கது என்பதுடன், பூரணப்படுத்தப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமை வானதா என்பது குறித்து விண்ணப்பதாரியினால் அவதானிக்க வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பப்படிவங்களை நிராகரிக்க முடியும்.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளதாக முன் தீர்மானத்திற்கமைய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்கு உட்படும் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினம் அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம், விண்ணப்பதாரியின் கையொப்பம் மற்றும் கையொப்பத்தை உறுதிப்படுத்துவதற்குரியதாயின் திணைக்களப் பொறுப்பாளரின் சான்றிதழுடன் சரியாகப் பூர்த்திசெய்து விண்ணப்பப்படிவங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ளார் என அங்கீகரிப்பதாகாது என்பதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

(viii) பரீட்சை அனுமதிப்பத்திரம் வெளியிடப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை நடைபெறும் தினத்திற்குக் குறைந்தபட்சம் 5 நாட்களுக்கு முன்னர் தமது அனுமதிப்பத்திரத்தைப் பெறாத பரீட்சார்த்திகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும்போது விண்ணப்பதாரி தாம் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியே வதிபவராயின் அவ்விபரங்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் பிரதியினைத் துரித கதியில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பதாரிகளின் தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி அது தொடர்பில் வினவுவது பயன்மிக்கதாகும். அவ்வாறு வினவும்போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவக்கூடிய ஏதேனும் தகவலை உறுதிப்படுத்துவதற்காக தாம் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவதக்தின் பிரதி, பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தியதன் மூலம் பெற்ற பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலிடும்போது பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டினைத் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(ix) பரீட்சார்த்தி தமக்கு உத்தரவிடப்பட்டுள்ள பரீட்சை மண்டபத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். சகல பரீட்சார்த்திகளும் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்தி அனுமதிப்பத்திரத்தைப் பரீட்சைக்குத் தோற்றும் தினமன்று அதனை மண்டபப் பொறுப்பாளருக்குக் கையளிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்படாத பரீட்சார்த்திக்குப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி வழங்கப்படமாட்டாது.

10. **உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்குதல்.**– தங்களினால் அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட் டுள்ள ஏதேனும் ஒரு தகவல் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் தங்களது பரீட்சார்த்தி அந்தஸ்து இரத்துச் செய்யப்படும். அவ்வாறான உண்மைக்குப் புறம்பாக அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரும் பட்சத்தில் அதற்குரிய செயற்பாடுகளுக்குக் கட்டுப்பட்டு சேவையிலிருந்து இடை நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

11. பரீட்சைக் கட்டணம் 500 ரூபா ஆகும். அக்கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வைப்பிலிடக்கூடியவாறு நாட்டில் அமைந்துள்ள எந்த வொரு தபால்/ உப தபால் அலுவலகங்களிலும் பணத்தைச் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் கழராது ஒட்ட வேண்டும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியினை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். ஏதேனும் ஒரு காரணத்திற்கமைய பரீட்சைக் கட்டணத்தை மீளச் செலுத்துதல் அல்லது வேறு பரீட்சைக்காக மாற்றுதல் என்பன அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன், காசுக் கட்டளை அல்லது முத்திரை பொறுப்பேற்கப்படமாட்டாது.

12. இவ்வறிவித்தல் மூலம் வெளிப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழி வாசகங்களுக்கிடையே ஏதேனும் ஒப்பீடற்ற நிலைமைகள் எழும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தலே சரியானது என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும்.

டபிள்யூ. எம். பந்துசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
'இசுருபாய',
பலவத்த,
பத்தரமுல்ல,
2015, நவெம்பர் 24.

(அலுவலகப் பயன்பாட்டிற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கல்வி அமைச்சு**

கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2015

Examination for Recruitment of Transport Officer for Ministry of Education - 2015

பரீட்சைக்குத் தோற்றும் மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக)

1 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMANKUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் குறிப்பிடப்படும் பெயரை முதலிலும் ஏனைய பெயர்களின் முதல் எழுத்துக்களைப் பின்னரும் குறிப்பிட்டு பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)

1.3 முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) :----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

3. 3.1 ஆண்/பெண் :
ஆண் - 0
பெண் - 1

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக)

3.2 திருமணமானவர்/திருமணமாகாதவர் :
திருமணமானவர் - 1
திருமணமாகாதவர் - 2

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் குறிப்பிடுக)

4. முகவரி :

4.1 அனுமதிப்பத்திரத்தை அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
4.2 கடமை முகவரி (சிங்களம்/தமிழில்) :----.
4.3 சொந்த முகவரி (சிங்களம்/தமிழில்) :----.

5. தொலைபேசி இலக்கம் :
5.1 அலுவலகம் :----.
5.2 சொந்த :----.

6. 6.1 தற்போதைய பதவி மற்றும் சேவை இடம் :----.
6.2 இப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :----.

7. 7.1 பிறந்த திகதி :

ஆண்டு மாதம் திகதி

7.2 விண்ணப்பப்படிவத்தைப் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் மாதங்கள் நாட்கள்

8. இலங்கைப் பிரசையாயின் பரம்பரையாகவா ? இன்றேல் பதிவின் மூலமா ? :----.

9. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் :

9.1 கல்வித் தகைமை :

| பரீட்சை | ஆண்டு | தோற்றிய பிரதான பாடங்கள் | சித்தி | பாடசாலையின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

9.2 தொழில் தகைமை :

| பரீட்சை | ஆண்டு | தோற்றிய பிரதான பாடங்கள் | சித்தி | நிறுவனத்தின் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

10. ஏனைய தகைமைகள் :----.

11. ஆங்கில மொழித் தேர்ச்சி :----.

12. பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரங்கள் :
12.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் அலுவலகம் :----.
12.2 பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.
12.3 செலுத்திய திகதி :----.

பற்றுச்சீட்டினைக் கழராது இங்கு ஒட்டவும்.

13. இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது எனத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் தெரியவரும் பட்சத்தில் தேர்ந்தெடுப்பதற்கு தகைமை அற்றவர் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் தெரியவரும் பட்சத்தில் எதுவித நட்டஈடும் செலுத்தாது சேவையிலிருந்து விலகுவதற்குக் கட்டுப்பட வேண்டும் என்பதனை நான் அறிந்துள்ளேன். மேலும் இப்பரீட்சையினை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகள் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுவதாகவும் தெரிவிக்கிறேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் ............................ என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிந்துள்ளதாகவும் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டினை ஒட்டியுள்ளதாகவும் 2015, .................... மாதம் .................... ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பம் இட்டதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தியவரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)
திகதி :----.

15. **திணைக்களம்/நிறுவனப் பொறுப்பாளரின் உறுதியுரை :**

கல்வி அமைச்சின் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் இந்நிறுவனத்தின் ..... ...................................... பதவி வகிக்கும் திரு./திருமதி/செல்வி .................................. இன் விண்ணப்பப்படிவத்தினைப் பரிந்துரை செய்கிறேன். அவரின் பணிகள் மற்றும் செயற்பாடுகள் திருப்திகரமானது என்றும் எதுவித ஒழுக்காற்றுச் செயற்பாடுகளும் இல்லை என்றும் அவ்வாறான செயற்பாடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் உறுதிப்படுத்துகிறேன். அவர் இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

----,
திணைக்களம்/நிறுவனப் பொறுப்பாளரின்
கையொப்பம்.
(பதவி முத்திரை)

12-452

---

## அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை - 2016

### சிங்களம்/தமிழ் - மட்டம் I, II, III, IV

### (இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்/அரச கரும மொழிகள் திணைக்களம்)

பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2004 இன் பிரகாரம் அரச ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 04/ 2014 இன் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் ஊழியர்களின் அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுவதுடன், பரீட்சையில் சித்தியடைவதற்கு 40% இற்குக் குறையாத புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். இப்பரீட்சை விடைத்தாள்கள் மீளப் பரீட்சிக்கப்பட மாட்டாது. அவ்வாறே பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட மாட்டாது. அவ்வாறே பரீட்சைப் பெறுபேறுகள் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட மாட்டாது என்பதுடன், அவை அரச கரும மொழிகள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். (எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் மட்டுமே வாய்மொழிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

3. பரீட்சார்த்திகள் தங்களது தேவைப்பாடுகளின் பிரகாரம் 2015.11.30 ஆந் திகதி முதல் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் www.languagesdept.gov.lk இணையத்தளம் மூலம் மாத்திரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். அதற்காக இணையத்தளத்திற்குப் பிரவேசித்து அதில் கூறப்படும் படிமுறையினைப் பின்பற்றல் வேண்டும். அதற்கமைய 2015, நவெம்பர் 30 ஆந் திகதி தொடக்கம் 2016, சனவரி 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களுக்காக மாச்சு மாதமும், 2016, பெப்புருவரி 1 ஆந் திகதி தொடக்கம் யூலை 31 ஆந் திகதி வரை கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்களுக்காக செத்தெம்பர் மாதமும், அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை நடைபெறும். ஒரு விண்ணப்பதாரி ஒரு தடவையில் ஒரு மொழியில் ஒரு மட்டத்திற்காக மட்டுமே விண்ணப்பிக்க முடியும். (**முக்கிய குறிப்பு**.- தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

4. ஒவ்வொரு சேவைக்கும் உரிய ஊழியர்கள் மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்வதற்காக சித்தியடைய வேண்டிய தேர்ச்சி மட்டத்தினைப் பொது நிர்வாக சுற்றறிக்கை இ. 01/ 2014 மற்றும் முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல. 04/ 2014 ஆகியவற்றின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேற்கூறிய சுற்றறிக்கைகள், உரிய பாடத்திட்டங்கள் மற்றும் ஏனைய விபரங்களை மேற்குறித்த இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

5. பரீட்சார்த்தியானவர் விசேட தேவைகளை உடைய ஒரு பரீட்சார்த்தியாக இருந்தால் அது தொடர்பான விபரங்களை விண்ணப்பத்தில் குறிப்பிடல் வேண்டும்.

6. சகல விண்ணப்பதாரர்களும் 500 ரூபாவைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். அப்பரீட்சைக் கட்டணத்தை இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் "இராஜகிரிய, இலங்கை வங்கியில் உள்ள அரச கரும மொழிகள் ஆணையாளரின் கணக்கு இலக்கம் 7041541 இற்கு வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட கணினி மூலம் அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டுப் பத்திர இலக்கம் மற்றும் திகதியை விண்ணப்பப்பத்திரத்தின் உரிய கட்டத்தில் குறிப்பிடல் வேண்டும்.

7. எழுத்துப் பரீட்சைக்காக இலங்கையில் சகல மாகாணங்களுக்குமான பரீட்சை நிலையம் அமையப்பெறவுள்ள நகரம் மற்றும் நகர இலக்கங்கள் என்பன இணைப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. ஏதேனும் நகரத்திற்குப் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாத விடத்து அப்பரீட்சை நிலையம் இரத்துச்செய்யப்பட்டு, விண்ணப்பதாரர் தெரிவுசெய்துள்ள இரண்டாம்/மூன்றாம் விருப்பின்படி பரீட்சை நிலையம் வழங்கப்படும்.

8. விண்ணப்பதாரர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் பின் உடனடியாக அவ்விடயம் பற்றிய பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2 அல்லது 3 நாட்களில் அனுமதிப்பத்திரம் கிடைக்காவிடில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டவாறு அதனை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

9. விண்ணப்பதாரருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமை பெற்றுள்ளார் எனப் பொருள்படாது.

10. பரீட்சார்த்தியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியான

கடவுச்சீட்டு என்பன மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். ஏதேனு மொரு காரணத்தினால் அவ்வாறு ஆள் அடையாளத்தை உறுதிப் படுத்தாமல் பரீட்சைக்கு சமுகமளிக்கும் பரீட்சார்த்திகளின் பெறுபேறுகள் அதுபற்றிய விசாரணையின் பின்னர் ஆள் அடையாள உறுதிப்பாட்டின் பின்னரே வழங்கப்படும்.

11. பரீட்சையினை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வழங்குதல் தொடர்பாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இவ்வெழுத்துப் பரீட்சை தொடர்பாக மேற்குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது அரச கரும மொழிகள் ஆணையாளர் ஆகியோரின் தீர்மானமே முடிவானதாக இருக்கும்.

12. எழுத்துப் பரீட்சையினை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப் படுகின்ற இவ்வறிவித்தலில் ஏதேனும் ஒவ்வாமை காணப்படின் அவ்வாறான நிலைமைகளில் சிங்கள மொழி அறிவித்தலுக்கேற்ப செயற்பாடுகள் இடம்பெறும்.

சட்டத்தரணி டபிள்யூ. ஏ. ஜயவிக்ரம,
அரச கரும மொழிகள் ஆணையாளர்.

அரச கரும மொழிகள் திணைக்களம்,
“பாஷா மந்திரய”,
இல. 341/7, கோட்டை வீதி,
இராஜகிரிய,
2015, நவெம்பர்.

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**அரச கரும மொழித் தேர்ச்சி எழுத்துப் பரீட்சை - 2016**

சிங்களம்/தமிழ் - (I, II, III, IV மட்டங்கள்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்/அரச கரும மொழிகள் திணைக்களம்

Written Examination for Official Language Proficiency - 2016

Level I, II, III, IV (Sinhala/Tamil)

Department of Examinations Sri Lanka/Department of Official Languages

பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் மாவட்டமும், மாவட்ட இலக்கமும் (விருப்பின்படி)
(அறிவித்தலின் 1 ஆம் இலக்க இணைப்பின் பிரகாரம்)

| மாவட்டம் | மாவட்ட இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

அரச கரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய மொழி
(தேர்ச்சி பெறவேண்டிய மொழியை உரிய கூட்டினுள் எழுதுக.)

சிங்களம் - 2
தமிழ் - 3

விண்ணப்பிக்கும் மட்டம் :
(தேர்ச்சிபெற வேண்டிய மட்டத்திற்கு உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதுக.)

1 ஆம் மட்டம்
2 ஆம் மட்டம்
3 ஆம் மட்டம்
4 ஆம் மட்டம்

**குறிப்பு.**- தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய மொழி மற்றும் விண்ணப்பிக்கும் மட்டத்தினை சரியாகக் குறிப்பிடல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.)

1. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (சிங்களம் அல்லது தமிழ் எழுத்துக்களில்) :----.
உதாரணம் : சமரசிங்ஹ ஆரச்சிகே சமன்குமார சமரசிங்ஹ)

2. விண்ணப்பதாரியின் முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
உதாரணம் : (SAMARASINGHE ARACHCHIGE SAMANKUMARA SAMARASINGHE)

3. முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.
(உதாரணம் : SAMARASINGHE, S. A. S. K.)

4. நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.:
(அனுமதிப்பத்திரம், பெறுபேறுகள் இம்முகவரிக்கே அனுப்பப்படும்)

5. பணியாற்றும் அலுவலகம் அமைந்துள்ள மாவட்டம் மற்றும் மாவட்ட இலக்கம் :----.

(அறிவித்தலின் இணைப்பு 01 இற்கமைய மாவட்ட மற்றும் மாவட்ட இலக்கத்தினைக் குறிப்பிடுக.)

6. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

7. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

8. தொலைபேசி இலக்கம் :

9. மின்-அஞ்சல் (ஈ-மெயில்) முகவரி :----.

10. நிரந்தர பதவி :----.

11. நீங்கள் விசேட தேவையுடைய உத்தியோகத்தரா ? ஆம்/இல்லை.

11.1 ஆம் எனில், கேட்டல் குறைபாடு - 0
பார்வைக் குறைபாடு - 1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

12. 01/2014 அல்லது 04/2014 சுற்றறிக்கையின்படி உரிய மட்டம் :----.

13. பரீட்சைக் கட்டணம் ரூ. ................................ ஐச் செலுத்திய வங்கிக் கிளை :----.

கணினி மூலம் அச்சிடப்பட்ட இலக்கம் :

செலுத்திய திகதி :----.

மேற்குறித்த விபரங்கள் சரியானவை எனவும், பரீட்சை சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுகின்றேன் எனவும், பரீட்சை குறித்த எந்தவொரு விடயம் தொடர்பிலும் அரச கரும மொழிகள் ஆணையாளரினால் எடுக்கப்படும் தீர்மானத்தை இறுதித் தீர்மானமாக ஏற்றுக்கொள்கிறேன் எனவும், பரீட்சை தொடர்பான அனைத்து நிபந்தனைகளையும் வாசித்து புரிந்து கொண்டேன் எனவும் நான் இத்தால் தெரிவித்துக்கொள்கிறேன்.

----,
திகதி :----. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

**இணைப்பு 1**

**பரீட்சை நிலையம் அமைந்துள்ள மாவட்டம்/நகரம் மற்றும் மாவட்ட இலக்கம்/நகர இலக்கம்**

| *மாகாணம்* | *மாவட்டம்/நகரம்* | *மாவட்ட இலக்கம்/ நகர இலக்கம்* |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 01 |
| | கம்பஹா | 02 |
| | களுத்துறை | 03 |
| வடமேல் மாகாணம் | குருநாகல் | 04 |
| | புத்தளம் (சிலாபம்) | 05 |
| தென் மாகாணம் | காலி | 06 |
| | மாத்தறை | 07 |
| | அம்பாந்தோட்டை (தங்கல்லை) | 08 |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 09 |
| | கேகாலை | 10 |
| ஊவா மாகாணம் | பதுளை | 11 |
| | மொனராகலை | 12 |
| மத்திய மாகாணம் | கண்டி | 13 |
| | மாத்தளை | 14 |
| | நுவரெலியா | 15 |
| வடமத்திய மாகாணம் | அநுராதபுரம் | 16 |
| | பொலன்னறுவை | 17 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 18 |
| | வவுனியா | 19 |
| | முல்லைத்தீவு | 20 |
| | கிளிநொச்சி | 21 |
| | மன்னார் | 22 |
| கிழக்கு மாகாணம் | திருகோணமலை | 23 |
| | மட்டக்களப்பு | 24 |
| | அம்பாறை | 25 |

12-500

**திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சு**

இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

*2016 ஆம் ஆண்டின் முதலாம் அரை ஆண்டிற்கான பயிலுநர்களை இணைத்துக் கொள்ளுவதற்கான அனுமதி*

*இலங்கை தொழிற் பயிற்சி அதிகார சபையினால் நாடு பூராகவுமுள்ள தேசியதொழிற்பயிற்சி நிலையங்கள், மாவட்ட தொழிற் பயிற்சி நிலையங்கள் மற்றும் மாவட்ட மட்டத்தில் செயற்படும் ஏனைய தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி சம்பந்தமாக 2016 ஆம் ஆண்டிற்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறும் NVQ (தேசிய தொழிற் தகைமை) பாடநெறி, NVQ அல்லாத பாடநெறி குறியீட்டு இலக்க அடிப்படையில் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது. NVQ மட்டம், பாடநெறி காலம், பாடநெறி கட்டணம் என்பன குறிக்கப்பட்டுள்ளன.*

*பாடநெறி சம்பந்தமாக அனுமதி.- மாவட்ட மட்டத்தில், தேசிய தொழிற் பயிற்சி நிலையங்களின் முகவரி, பாடநெறிகள் குறியீட்டு இலக்க அடிப்படையில் கீழ்வருமாறு காணப்படுமிடத்து தாங்கள் விரும்பும் பாடநெறியினை தெரிவு செய்து குறிக்கப்பட்ட மாவட்ட/ தேசிய தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பதிவு தபாலில் விண்ணப்பப்படிவத்தினை அனுப்பி வைக்கவும். இத்தோடு முன்வைக்கப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப (13"X8") அளவில் அனுப்பி வைக்கவும். தாங்களால் அனுப்பி வைக்கப்படும் கடித உறையின் இடது பக்கத்தின் மூலையில் "பயிலுநர் இணைத்துக்கொள்ளல் - 2016" எனக்குறிக்கப்படல் வேண்டும்.*

| | | |
|---|---|---|
| விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி | - | 2016, சனவரி 04 |
| பாடநெறி ஆரம்பம் | - | 2016, சனவரி 11 |
| மேலதிக விபரங்களுக்கு : | | |
| தொலைபேசி இலக்கம் | - | 011-2505123 |
| | - | 011-7270270 |
| தொலைநகல் இலக்கம் | - | 011-2352185 |
| | - | 011-2352160 |
| தொலைநகல் | - | 011-2502342 |
| மின்னஞ்சல் முகவரி | - | cgjp@vtasl.gov.lk |
| இணையத்தளம் | - | www.vtasl.com |
| முகப்புத்தகப் பகுதி | - | www.facebook.com/vtasl |

தலைவர்,
இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை.

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை,
4ஆம் மாடி ,
"நிபுணதா பியச",
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05.

பயிற்சியுடன் உங்களுக்கு :

* பயிற்சி நிலைய பயிற்சியின் போது பயிலுநர்களுக்கு முழுக் காப்புறுதி
* தேர்ச்சி அடிப்படையிலான பயிற்சி (CBT) கீழ் பயிற்சியினை தொடர்தல்.
* தேசிய தராதரமட்டத்திலான (NVQ) சான்றிதழ் மட்டம் 3, 4 பெற்ற பின் டிப்ளோமா, உயர் டிப்ளோமா உடன் தொழில்நுட்ப உயர்பட்டம் பெறுவதற்கான சந்தர்ப்பம்.
* விசேடமாக சில பாடநெறிகளுக்கு மாதம் 1,000/- இலிருந்து 2,000/- வரை உதவுத்தொகை. (கட்டிட நிர்மாணம், மேசன், நீர்க்குழாய் பொருத்துனர், தளபாட உற்பத்தியாளர், தளபாட பூ செதுக்கல் வேலையாளர், ஒட்டுவேலை செய்பவர் (இரும்பு) பாடநெறிகளுக்காக 2,000 ரூபாவும் ஏனைய அனைத்து இலவச பாடநெறிகளுக்கும் 1,000 ரூபாவும் உதவுத்தொகையாக வழங்கப்படும்.)
* குறைந்த கட்டணத்திலான (இ.போ.ச.) பருவச்சீட்டு
* பயிற்சி சேவைகளும், ஆங்கில பயிற்சியும்
* தொழில் வழிகாட்டல் சேவைகள்
* பயிற்சி சம்பந்தமான மேலதிக அறிவு
* இலவச காப்புறுதி

பயிற்சியின் பின் உங்களுக்கு :

* உதவித் தொகையுடன் மேலதிக பயிற்சி
* அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
* வெளிநாட்டு வேலைக்கு போகக்கூடிய வாய்ப்பு
* சுயதொழில் வாய்ப்புக்கள்

* சிறிய, மத்திய அளவிலான வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கான தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளும், கடன் வசதிகளும் பெற்றுக்கொடுத்தல்.
* வியாபார சம்பந்தமான ஆலோசனை சேவைகள் பெற்றுக்கொடுத்தல்.
* குறிக்கப்பட்ட பாடநெறியில் அதிகூடிய திறனை பெறுதல்.
* தொழில் கல்வியில் தொழில் நுட்பப் பட்டம் பெறுதல்.

| தொடர் இல. | பயிற்சி நெறி | பயிற்சிக் காலம் (மேலதிக பயிற்சி உட்பட) | தேசிய தொழில் தகைமை மட்டம் | பயிற்சிக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | அலுமினியம் பொருத்தும் தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 2 | தன்னியக்க மோட்டார் வாகன தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | 36 | III | 5,000 |
| 3 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியலாளர் (மேசன்) - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 4 | கட்டிட நிர்மாண தொழில்நுட்பவியலாளர் (நீர்க்குழாய் பொருத்துதல்) - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 5 | சாரதிப்பயிற்சி (கனரக/இலகுரக) வாகனம் - தேசிய சான்றிதழ் | 6 | Non | 10,500/ 12,000 |
| 6 | மின்னியல் மோட்டர் வைண்டிங் தொழில்நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 7 | மின்னிணைப்பு தொழில் நுட்பவியலாளர் (வீட்டு) - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 8 | மின்னிணைப்பு தொழில்நுட்பம் (கைத்தொழில்) - தேசிய சான்றிதழ் | 36 | III | 4,500 |
| 9 | குளிரூட்டி மற்றும் வளி சீராக்கி திருத்துநர் - தேசிய சான்றிதழ் | 36 | III | 5,000 |
| 10 | வானொலி, தொலைக்காட்சி மற்றும் அதனோடு இணைந்த உபகரணங்கள் திருத்துநர்- தேசிய சான்றிதழ் | 36 | III | 5,000 |
| 11 | அறை பராமரிப்பாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | 5,000 |
| 12 | உணவு மற்றும் குடிபான சேவகர் /உபசாரகர் - தேசிய சான்றிதழ் | 24 | III/IV | 6,000 |
| 13 | ஆடைத்தொழிற்சாலை தரக்கட்டுப்பாட்டாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 14 | காய்ச்சி இணைப்பவர் - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 15 | கைத்தொழில் துறைசார் தையல் இயந்திர இயக்குநர் | 18 | III/IV | இலவசம் |
| 16 | வெதுப்பக உற்பத்தியாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | 4,500 |
| 17 | வெதுப்பக உற்பத்தியாளர் - தேசிய சான்றிதழ் | 24 | IV | 7,500 |
| 18 | சமையலாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | 4,500 |
| 19 | சமையலாளர் - தேசிய சான்றிதழ் | 24 | IV | 7,500 |
| 20 | தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்) - தேசிய சான்றிதழ் | 24 | IV | 3,000 |
| 21 | தையல் (ஆண்கள்) - தேசிய சான்றிதழ் | 24 | IV | 2,500 |
| 22 | அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ் | 12 | IV | 8,500 |
| 23 | சிகை அலங்கார நிபுணர் - தேசிய சான்றிதழ் | 12 | IV | 11,500 |
| 24 | தன்னியக்க மோட்டார்வாகன திருத்துநர் - தேசிய சான்றிதழ் | 36 | III | 5,000 |
| 25 | தன்னியக்க மோட்டார்வாகன மின்னியலாளர் - தேசிய சான்றிதழ் | 36 | III | 6,000 |
| 26 | தன்னியக்க மோட்டார்வாகன வர்ணம் பூசுபவர் - தேசிய சான்றிதழ் | 24 | III/IV | 3,500 |
| 27 | முச்சக்கரவண்டி திருத்துநர் - தேசிய சான்றிதழ் | 24 | III | 2,500 |
| 28 | மோட்டார் சைக்கிள் திருத்துநர் - தேசிய சான்றிதழ் | 24 | III | 2,500 |
| 29 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய டிப்ளோமா - Level 5 | 24 | V | 42,000 |
| 30 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர் - தேசிய தொழில் தகைமை மட்டம் IV | 24 | IV | 9,000 |
| 31 | கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் NVQ IV உடன் CISCO IT Essential /A Plus - தேசிய சான்றிதழ் | 24 | IV | 13,500 |
| 32 | கணினி கிரபிக்ஸ் வடிவமைப்பாளர் - தேசிய சான்றிதழ் | 24 | IV | 14,000 |
| 33 | CISCO | 18 | Non | 41,500 |
| 34 | தளபாட உற்பத்தி தொழில் நுட்பவியலாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 35 | விவசாய இயந்திர திருத்துநர் - தேசிய சான்றிதழ் | 36 | III | இலவசம் |
| 36 | வெளியக படகு இயந்திர திருத்துநர் - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 37 | செயலாண்மை பயிற்சி நெறி/செயலாளர் | 30 | Non | 7,000 |
| 38 | இயந்திரவியலாளர் (பொது) | 36 | IV | 5,500 |
| 39 | அழகுக்கலை நிபுணர் - தேசிய சான்றிதழ் | 12 | III | 4,500 |
| 40 | சிகை அலங்கார நிபுணர் - தேசிய சான்றிதழ் | 12 | III | 5,500 |

| தொடர் இல. | பயிற்சி நெறி | பயிற்சிக் காலம் (மேலதிக பயிற்சி உட்பட) | தேசிய தொழில் தகைமை மட்டம் | பயிற்சிக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|
| 41 | சமையல் கலைஞர் | 16 | Non | |
| 42 | உணவு மற்றும் பானங்கள் வழங்குநர் | 16 | Non | |
| 43 | உணவக முகாமைத்துவம் | 16 | Non | |
| 44 | அறை உதவியாளர் | 16 | Non | |
| 45 | முன்பள்ளி ஆசிரியர் | 36 | III | 6,000 |
| 46 | கணிய அளவையாளர் - தேசிய டிப்ளோமா | 48 | V | 62,000 |
| 47 | உதவி கணிய அளவையாளர் - தேசிய சான்றிதழ் | 24 | III | 27,000 |
| 48 | நிலம் அழகுபடுத்துநர் | 24 | III / IV | இலவசம் |
| 49 | தோற் பொருள் உற்பத்தி - தேசிய சான்றிதழ் | 24 | III | இலவசம் |
| 50 | இயந்திரவியலாளர் (CNC) | 24 | | 6000.00 |
| 51 | தளபாட பூ செதுக்கல் வேலையாளர் | 12 | | இலவசம் |
| 52 | படவரைஞர் | 24 | IV | |
| 53 | மரக்கறி மற்றும் பழங்கள் பதனிடுதல் | 24 | III | இலவசம் |

| மாவட்டம்/தே. தொ. ப. நி. | பயிற்சி நெறி இல. |
|---|---|
| உதவிப்பணிப்பாளர்,<br>DVTC - அம்பாறை,<br>நிந்தவூர், அம்பாறை,<br>தொலைபேசி இல: 067-2250196 | 01, 02, 03, 04, 06, 07, 08, 09, 10, 11, 12,13,14, 15, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 27, 28, 29, 30, 31, 34, 39, 40, 47 |
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - வவுனியா,<br>இல. 108, ஸ்டேசன் வீதி,<br>வைரவப்புளியம்குளம், வவுனியா,<br>தொலைபேசி இல: 024-2221617 | 01, 03, 04, 07, 14, 20, 27, 28, 30, 31, 32, 34, 39, 40, 49 |
| உதவிப்பணிப்பாளர்,<br>DVTC – திருகோணமலை,<br>யொவுன் வீதி, கந்தளாய்,<br>தொலைபேசி இல: 026-2234517 | 01, 03, 04, 07, 08, 09, 19, 20, 27, 28, 30, 31, 32, 34, 35, 39, 40 |
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - முல்லைத்தீவு,<br>மாங்குளம் வீதி, முல்லைத்தீவு,<br>தொலைபேசி இல: 071-3641507 | 01, 04, 07, 08, 09, 14, 16, 20, 21, 24, 27, 28, 30, 31, 39, 40, 45 |
| உதவிப் பணிப்பாளர்,<br>VTC–மன்னார்<br>இல. 108, ஸ்டேசன் வீதி,<br>வைரவப்புளியம்குளம், வவுனியா,<br>தொலைபேசி இல: 024-2221617 | 07, 20, 34, 39, 40 |
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - கிளிநொச்சி,<br>155 ஆம் கட்டை,<br>A 9 வீதி, கிளிநொச்சி,<br>தொலைபேசி இல: 021-2285686 | 01, 03, 04, 07, 08, 09, 14, 16, 20, 30, 31,34, 35, 39, 40, 52, 53 |
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - நுவரெலியா,<br>வெடபன் வீதி, மவுண்ட் மேரி<br>கட்டிடம், நுவரெலியா,<br>தொலைபேசி இல: 052-2223216 | 01, 07, 08, 10, 11, 12, 13, 20, 22, 23, 24, 29, 30, 31, 37, 38, 48 |

| மாவட்டம்/தே. தொ. ப. நி. | பயிற்சி நெறி இல. |
|---|---|
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC – யாழ்ப்பாணம்,<br>1 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம்,<br>இல 12, KKS வீதி, யாழ்ப்பாணம்,<br>தொலைபேசி இல: 021-2227949 | 01, 03, 04, 06, 07, 08, 09, 10, 14, 20, 21, 24, 27, 28, 30, 31, 32, 33, 34, 35, 36, 39, 40, 42, 43, 44, 45 |
| உதவிப் பணிப்பாளர்,<br>DVTC - மட்டக்களப்பு,<br>APC வீதி, வந்தாறுமூலை,<br>மட்டக்களப்பு,<br>தொலைபேசி இல: 065-2240159 | 01, 02, 03, 04, 06, 07, 08, 09, 10, 11, 12, 14, 16, 17, 18, 19, 20, 21, 24, 25, 26, 27, 28, 29, 30, 35, 36, 38, 39, 40, 46 |

பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளுவதற்கு தேவையான ஆகக்குறைந்த தகைமை க.பொ.த. (சா.தரம்) பரீட்சைக்கு தோற்றியிருத்தல்

* கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் (மேசன்) தேசிய சான்றிதழ்
* கட்டிட நிர்மாண தொழில்நுட்பம் (நீர்க்குழாய் பொருத்துநர்) தேசிய சான்றிதழ்
* சூழல் அலங்காரவியல் - தேசிய சான்றிதழ்
* மர பூ செதுக்குதல்
* தளபாட உற்பத்தி தொழில்நுட்பவியலாளர் (தளபாடம் - 06)
* சாரதிப்பயிற்சி (இலகுரக) வாகனம் 18 வயதுக்கு மேல்
* சாரதிப்பயிற்சி (பார) வாகனம் 21 வயதுக்கு மேல்
* தன்னியக்க வாகன தகர வேலை செய்பவர்
* தன்னியக்க வாகன வர்ணம் பூசுபவர்
* மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவியலாளர்
* முச்சக்கரவண்டி தொழில்நுட்பவியலாளர்
* தொழில்சார் உணவு மற்றும் குடிபான சேவை
* தோல் பாதணிகள் வடிவமைப்பு
* அலுமினியம் பொருத்துநர்
* ஒட்டுவேலை செய்பவர் (06 மாதம்)
* வரைபட கலைஞர்
* அழகுக்கலை நிபுணர்
* கேச அழகுபடுத்துநர்
* அதிவேக தையல் இயந்திர இயக்குநர்
* அதிவேக தையல் இயந்திர திருத்துநர்
* தையல் (பெண்கள் மற்றும் சிறுவர்கள்)
* தையல் (ஆண்கள்)
* திரைச்சீலை பிரிண்டிங்

**க.பொ.த. (சா.தரம்) 6 பாடங்களில் சித்தி பெற்றோர் :**

* கட்டிட நிர்மாண முகாமைத்துவம்
* படவரைகலைஞர்
* மோட்டார் வாகன தொழில்நுட்பம்
* மோட்டார் வாகன மின்னியலாளர்
* மோட்டார் வாகன வாயு பொருத்துநர்
* மின்னியலாளர்
* மின் உபகரணங்கள் திருத்துநர்

**பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளுவதற்கு தேவையான ஆகக்குறைந்த தகைமை க.பொ.த (சா.தரம்) பரீட்சைக்கு தோற்றியிருத்தல்**

* மின்னிணைப்பாளர் (6 மாதம்)
* சமையற்கலையாளர் (6 மாதம்)
* வீட்டு மின் உபகரணங்கள் திருத்துநர், மின்னியல் (6 மாதம்)
* அலுமினியம் பொருத்தும் தொழில்நுட்பம் (6 மாதம்)
* மின்னியல் மோட்டார் வைண்டிங் தொழில்நுட்பம்
* கட்டிட நிர்மாண, தொழில்நுட்பம் (மேசன், மற்றும் நீர்க்குழாய் பொருத்துநர்)

**க.பொ.த(சா.தரம்) 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

கணினி வன்பொருள் தொழில்நுட்பம்
மோட்டார் வாகன தொழில்நுட்பம்
கணினி வடிவமைப்பாளர்
ஆடை வடிவமைப்பாளர்
ஆடைத்தொழிற்சாலை தரக்கட்டுப்பாட்டாளர்
ஆடைத்தொழிற்சாலை உற்பத்தி மேற்பார்வையாளர்
பப்ரிக் கட்டர்
பட வரைஞர்

**க.பொ.த. (சா.தரம்) ஆங்கிலம் மற்றும் கணிதம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)

**க.பொ.த.(சா.தரம்) ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்**

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ்

விண்ணப்பப்படிவங்களை 2016.01.04 ஆந் திகதிக்கு முன்பாக பாடநெறி தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தின் உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவும்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை**

முதலாம் அரையாண்டுக்கான பயிலுநர்களை இணைத்துக்கொள்ளல் - 2016

1. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
2. முகவரி :----.
3. வதிவிடம் :
   (1) கிராம அலுவலர் பிரிவு :----.
   (2) பிரதேச செயலாளர் பிரிவு :----.
   (3) மாவட்டம் :----.
4. தொலைபேசி இலக்கம் :----.
5. பிறந்த திகதி :----.
6. தேசிய அடையாள அட்டை :----.
7. பெற்றுக்கொண்டுள்ள ஆகக்கூடிய கல்வி தகைமை :----.

உங்களது கல்வித்தகைமைக்கு ஏற்ப இணைந்து கொள்ள விரும்பும் பாடநெறி மற்றும் அவற்றை தொடர விரும்பும் பயிற்சி நிலையங்களை ஒழுங்காக குறிப்பிடுக :

| பாடநெறி | பயிற்சி நிலையம் |
|---|---|
| .............................. | .............................. |
| .............................. | .............................. |

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியென உறுதிப்படுத்துகிறேன்.

..........................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

12-429